[21st July 1964

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.
(b) No.

" தமிழ்நாடு இல்லம் ", டில்லி.

*594 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டில்லியில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு (Madras House) ஆன செலவில் மத்திய அரசாங்க மானியம் ஏதேனும் கிடைத்ததா ? ஆமெனில் எவ்வளவு ?

(இ) இந்த இல்லத்தில் தமிழக அமைச்சர்கள் மட்டுமே தங்க அனுமதிக்கப்படுவார்களா அல்லது தமிழகத்திலிருந்து செல்லும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்க அனுமதிக்கப்படுவார்களா ?

(உ) இந்த இல்லத்திற்காக ஆண்டுதோறும் எவ்வளவு செலவாகும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) According to the Rules for occupation of Rooms in 'Madras House', Governor, Ministers, Speaker, Chairman, Officers of this Government on official business and Members of the Legislative Assembly and Council of this State are eligible to stay in 'Madras House'. Members of Parliament of this State have NOT specifically been mentioned in the Rules as they are provided with quarters in Delhi by the Government of India.

(c) The total expenditure for the current year is estimated at Rs. 70,100.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மத்திய அரசாங்கம் பணம் கொடுக்காதது மட்டுமல்ல, நிலம் கூட சும்மாக் கொடுக்கவில்லை. நிலத்தை விலைக்கு வாங்கி நம் அரசாங்கச் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் டெல்லிக்குச் சென்றால் வசதியாக தங்கவும், அரசாங்க வேலைகளை ஒழுங்காக கவனிக்கவும் இந்த வசதி அவசியமென்று கருதுகிறேன். அதே சமயத்தில் அமைச்சர்களுடன் செல்கிற உதவியாளர்கள், ப்யூன்கள் இவர்கள் இதேமாதிரி இடத்தில் தங்க வசதி வேண்டாம், ஆனால் அக் காம்பவுண்டிற்குள்ளாவது அவர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது அமைச்சர்களுடனும், மற்ற அதிகாரிகளுடனும் செல்கிறவர்களுக்கு அங்கு தங்க இடம் இருக்கிறது.

திரு. முனு. ஆதி : செலவு 70,000 ரூபாய் என்று சொன்னீர்கள். அதன் வருமானம் எவ்வளவு என்று சொல்லமுடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வருமானத்திற்கு தனிக் கேள்வி போட்டால் கணக்குப் பார்த்துச் சொல்ல முடியும்.

21st July 1964]

திரு. மா. இராசாங்கம் : டெல்லியில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு 'மதருஸ் ஹவுஸ்' என்று பெயர் பலகை மாட்டப் பட்டிருக்கிறதா? அல்லது தமிழ் நாடு இல்லம் என்று பெயர் போடப்பட்டிருக்கிறதா? 'மதருஸ் ஹவுஸ்' என்றிருந்தால் அதை தமிழ் நாடு இல்லம் என்று பெயர் மாற்ற சர்க்கார் ஆலோசனை கூறுமா?

கனம் சபாநாயகர் : தங்கள் வீட்டுக்குத் தாங்கள் பெயர் வைத்துக் கொள்ள ஆலோசனை எதற்கு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது 'மெட்ருஸ் ஹௌஸ்' என்று பெயர் போட்டிருக்கிறது. 'மெட்ருஸ் ஹௌஸ்' என்று சொன்னால்தான் உலகம் பூராவுக்கும் நன்கு தெரிகிறது.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : டெல்லியில் கட்டப் பட்டிருக்கும் தமிழ் நாடு இல்லத்தில் தமிழ் நாடு சட்டசபை அங்கத்தினர்கள் போனால் தங்கலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தங்கலாம் என்று சொன்னேன். இலவசமாகத் தங்கலாமா என்று கேட்டால் இல்லை என்று சொல்கிறேன்.

தீ அணைக்கும் நிலையம்

* 595 **கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் தீயணைக்கும் நிறுவனம் ஒன்று ஏற்படுத்த இடம் பார்க்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில் அது எப்போது அமைக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) 1964-65-ல் பெரம்பலூரிலும் இதர மூன்று நகரங்களிலும் தீ அணைப்பு நிலையம் நிறுவும் திட்டம் குறித்து அரசாங்கம் அண்மையில் ஆலோசித்தது. ஆனால், நிதி நிலைமை கஷ்டமாயிருப்பதால், இத் திட்டத்தை அடுத்த ஆண்டில் மீண்டும் ஆலோசிக்கலாமென அரசாங்கம் முடிவு செய்தது.

* 596 **கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ல் எந்தெந்த இடங்களில் தீயணைக்கும் படைகள் புதிதாக அமைக்க சர்க்கார் உத்தேசித்துள்ளது?

கனம் திரு. பூ. கக்கன் : ஓரிடத்தில் தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்துவது, அந்த இடத்தில் துரித வளர்ச்சியையும் அங்கே தொழிற்சாலை விபத்துக்கும், வீட்டு விபத்துக்களும் மற்ற தீ விபத்துக்களும் ஏற்படுகிற நிலையையும் பொறுத்திருக்கிறது. இந்த